மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை :– செல்வி. அ. இலக்கியா, பி.பி.ஏ., எல்எல்.பி.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தூர்.
2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 09 ம் நாள் திங்கள்கிழமை
இ.மஎண்.02/2025
உள்
அசல் வழக்கு எண்.49/2025
––––––––

1. சுப்புராஜ்
2. ராமர்
3. காளிராஜ்
4. முருகன்
5. பாலசுப்பிரமணியன்
6. வெள்ளைச்சாமி
7. செண்பகராஜ்
8. மாரியப்பன் .. மனுதாரர்கள்/1 முதல் 4 மற்றும் 6 முதல் 9 பிரதிவாதிகள்

/எதிர்/

1. விஸ்வகர்ம செழுமரபினர் சமுதாயத்திற்குப் பாத்தியப்பட்ட அருள்மிகு ஸ்ரீ உதிரமாட அய்யனார், திருக்கோவில், குலதெய்வமாக வழிபடுவோர்கள் சங்கம், தோட்டிலோவன்பட்டி அதன் செயலாளர் கே. குமார் மூலம். .. எதிர்மனுதாரர் / வாதி
2. இராமகிருஷ்ணன் .. எதிர்மனுதாரர்/5 ம் பிரதிவாதி
3. வட்டார வளர்ச்சி அலுவலர், ஊராட்சி ஒன்றியம், சாத்தூர்.
4. உதவி பொறியாளர், பொதுப்பணித்துறை, சாத்தூர்.
5. வட்டாட்சியர், சாத்தூர்.
6. மாவட்ட ஆட்சித் தலைவர், விருதுநகர். .. உத்தேச 10 முதல் 13 எதிர்மனுதாரர்கள் உத்தேச 10 முதல் 13 பிரதிவாதிகள்

இந்த மனு என் முன்பு 20.02.2026 ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. எல். முரளி, அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். இராஜேஸ், அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர் அழைத்தும் ஆஜராகாத காரணத்தினால் தோன்றாத் தரப்பினராக்கப்பட்டும், 3 முதல் 6 உத்தேச எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் நிகழ்த்திய வாதுரை மனுதாரர்கள் தரப்பு மனு மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரையை நன்கு கேட்டறிந்தும், சாட்சிய

சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

**உத்தரவு**

இம்மனுவானது தாவா தோட்டிலோவன்பட்டி கிராமம் சர்வே எண்69 நீர்நிலை அரசு புறம்போக்கிலிருந்து வருவதால் அரசு அதிகாரிகளான 10 முதல் 13 உத்தேச எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளான வட்டார வளர்ச்சி அலுவலர், சாத்தூர், உதவி செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை சாத்தூர், வட்டாட்சியர், சாத்தூர், மாவட்ட ஆட்சித்தலைவர், விருதுநகர் ஆகியோர்களை தாவா வழக்கில் கட்சிக்காரர்களாக சேர்த்து வழக்கு நடத்த உத்தரவிட வேண்டி கட்டளை 1 விதி 10 (2) மற்றும் பிரிவு 151 உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுதாரர்கள்/1 முதல் 4 மற்றும் 6 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டு சுருக்கம்**:–

2.1. மனுவில் மனுதாரர்கள். அசல் வழக்கில் 2 முதல் 4 மற்றும் 6 முதல் 9 பிரதிவாதிகள் பிராது தபசில் கொண்ட தங்கள் ஊருக்கு பாத்தியப்பட்ட அய்யனார் கோவில் தோட்டிலோவன்பட்டி கண்மாய் சர்வே எண்.69 பரப்பு 0.50.40.5 ல் அமைந்துள்ளது. தங்கள் ஊருக்கு பாத்தியப்பட்ட அய்யனார் கோவில் அமைந்துள்ள தோட்டிலோவன்பட்டி கண்மாய்க்குள் கருப்பசாமி கோவில், முனியசாமி கோவில், செல்லியாரம்மன் கோவில், பேச்சியம்மன்கோவில், மாடசாமி கோவில், வைரவசாமி கோவில், இராக்காச்சியம்மன் கோவில் உள்ளது. தங்களது முன்னோர்கள் பலதலைமுறைகளாக வழிபட்டு பரம்பரையாக மனுதாரரும் தனது கிராமமக்களும் கோவிலை பராமரித்து வழிபட்டு வருகின்றோம்.

2.2. மேற்படி அய்யனார் கோவில் அமைந்துள்ள அரசு புறம்போக்கு நிலமாகும். மேற்படி தோட்டிலோவன்பட்டி கண்மாய் 10 முதல் 13 உத்தேச பிரதிவாதிகள் பராமரிப்பிலும், கட்டுப்பாட்டிலும் உள்ளது. மேற்படி சர்வே எண்.69 நீர்நிலை அரசு புறம்போக்கு தனிப்பட்ட நபர்களுக்கு பாத்தியப்பட்டது கிடையாது. மேற்படி சர்வே எண்ணில் அய்யனார் கோவில் மற்றும் அதை சுற்றி அமைந்துள்ள மற்ற கோவிலுக்குள் தனிப்பட்ட நபர்களுக்கோ, வாதி சமுதாயத்திற்கோ, வாதி சங்கத்திற்கோ பாத்தியப்பட்டது கிடையாது. வாதி மேற்படி கிராமத்திற்கு பாத்தியப்பட்ட கோவிலை அபகரிக்கும்

நோக்கில் டிரஸ்ட் ஏற்படுத்தி மேற்படி கிராமத்திலுள்ள பொதுமக்கள் மற்றும் பட்டியலின மக்களின் வழிபாட்டு உரிமையை மறுத்து கடந்த 5 வருடங்களாக பிரச்சனை செய்து வருகின்றனர்.

2.3. வாதி டிரஸ்ட்டுக்கு கோவிலை நிர்வாகம் செய்ய அரசோ, ஊர்பொதுமக்களோ எந்தவித உரிமையும் கொடுக்கவில்லை. வாதி தனிப்பட்ட டிரஸ்ட் என்பதால் அவர்கள் டிரஸ்ட் சம்பந்தமான வழிபாட்டு தலங்கள் சம்பந்தமாக மட்டுமே நடவடிக்கை எடுக்க இயலும். வாதி ஊர் பொதுக் கோவிலை ஆக்கிரமித்து உரிமை கொண்டாடவோ வழிபாட்டு உரிமையோ தடுக்கவோ எந்த அதிகாரமும் கிடையாது. மேற்படி தோட்டிலோவன்பட்டி கிராம சர்வே எண்.69 நீர்நிலை புறம்பபோக்கு என்பதால் மேற்படி சொத்து அரசுக்கு பாத்தியப்பட்டு அரசு பராமரிப்பில் இருந்து வருகிறது. அரசு அதிகாரிகளான 10 முதல் 13 உத்தேச பிரதிவாதிகள் கட்டுப்பாட்டிலும், பராமரிப்பிலும் இருந்து வருவதால் தபசில் சொத்து சம்பந்தமாக தாவா வழக்கை தீர்மானிக்க அவர்கள் அவசிய கட்சிக்காரர்கள் ஆவார்கள். எனவே மேற்படியார்களை தாவா வழக்கில் கட்சிக்காரர்களாக சேர்த்து வழக்கை மேல் நடத்த உத்தரவிட வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் உள்ளது. எனவே வழக்கு தாக்கல்.

3) **<u>1ம் எதிர்மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:-</u>**

3.1. இதனடியில் வியக்கத்தக்கமாய் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகள் தவிர மனுவில் குறிப்பிடும் சங்கதிகள் யாவும் உண்மைக்குப் புறம்பான காரணத்தால் அவை முற்றிலும் மறுக்கப்படுகிறது. தாவா வழக்கல் மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எவ்வித நியாயமான கட்சிகளும் இல்லை. அதன் காரணமாகவே தாவா வழக்கினை காலதாமதப்படுத்த வேண்டுமென்ற தீய நோக்கில் மட்டும் உண்மைக்குப் புறம்பான சங்கதிகளை கொண்டு மனுதாரர்கள் தாவா மனுவை தாக்கல் செய்துள்ளனர். தாவா அசல் வழக்கில் வாதிகள் தபசில் சொத்தான கோவில் மட்டும் வாதிக்குப் பாத்தியப்பட்டது என விளம்புகை செய்யக்கோரியும், அதனைத் தொடர்ந்து வாதி சங்கத்தினா தபசில் சொத்தான கோவிலில் நிர்வாகம் செய்து வருவதை 1 முதல் 9 பிரதிவாதிகளோ அவர்களது வகையாட்களோ எவ்வித இன்னலோ, இடையூறோ செய்யாமல் இருக்க நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும் தாவா வழக்கினை தாக்கல் செய்துள்ளனர்.

3.2. மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தபசில் சொத்தான கோவிலில் இந்நிர் 1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பிற்கு இடையூறு செய்த காரணத்திற்காக மட்டுமே தாவா அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளனர். தாவா வழக்கு சம்பந்தப்பட்ட மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் நடைபெற்ற WP (MD) No.11369/2024 WP (MD) NO.26636/2024 நீதிப்பேராணையும் தபசில் சொத்தான கோவிலின் உரிமை மீது மட்டும் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து தீர்மானித்துக் கொள்ள உத்தரவு பிறப்பித்த காரணத்தினால் அதனடிப்படையில் மட்டுமே வாதி இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார். தபசில் சொத்தான கோவிலில் 1ம் எதிர்மனுதாரர்/வாதியே கட்டிடங்கள் கட்டி கோவிலை நாளது தேதி வரை நல்லமுறையில பராமரித்து வருகிறார்கள். தாவா வழக்கிடை சொத்தான கோவிலில் 1983ம் வருடத்தில் இந்நிர் டிரஸ்ட் பேரிலேயே மின்னிணைப்பும் பெறப்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரர்/வாதி டிரஸ்ட் 29.06.2011ம் தேதியிட்டு டிரஸ்ட் பத்திரத்தின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட டிரஸ்ட் ஆகும். கோவில் மற்றும் சிலைகள் வாதி டிரஸ்டாலேயே அமைக்கப்பட்டு நாளது தேதி வரை நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. தாவா வழக்கின் மனுதாரர்கள் அரசு இயந்திரத்தை தனக்கு சாதகமாக பயன்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில் மட்டுமே தற்போது 10 முதல் 13 உத்தேச எதிர்மனுதாரர்களை தாவா வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கக்கோரி தாவா மனுவை மனுதாரர்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளனர். மனுதாரர்களுக்கு தாவா மனுவை தாக்கல் செய்ய எவ்வித உரிமையும் முகாந்திரமும் கிடையாது. தாவா மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. எனவே மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள தாவா மனுவினை இந்த எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்படுகிறது.

4) இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதேயாகும்.

5) இருதரப்பிலும் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் தாக்கல் செய்யப்படவில்லை.

6) **<u>தீர்வு</u>**:-

6.1. அசல் வழக்கில் 10 முதல் 13 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளை

தரப்பினர்களாக சேர்க்க உத்தரவிடக்கோரி தாக்கல் செய்துள்ள மனுவிற்கு மனுதாரர்கள் கூறும் காரணம் என்னவென்றால், தோட்டிலோவன்பட்டி கண்மாய் 10 முதல் 13 உத்தேச பிரதிவாதிகள் பராமரிப்பிலும், கட்டுப்பாட்டிலும் உள்ளது. மேற்படி சர்வே எண்.69 நீர்நிலை அரசு புறம்போக்கு தனிப்பட்ட நபர்களுக்கு பாத்தியப்பட்டது கிடையாது. மேற்படி சர்வே எண்ணில் அய்யனார் கோவில் மற்றும் அதை சுற்றி அமைந்துள்ள மற்ற கோவிலுக்குள் தனிப்பட்ட நபர்களுக்கோ, வாதி சமுதாயத்திற்கோ, வாதி சங்கத்திற்கோ பாத்தியப்பட்டது கிடையாது. வாதி மேற்படி கிராமத்திற்கு பாத்தியப்பட்ட கோவிலை அபகரிக்கும் நோக்கில் டிரஸ்ட் ஏற்படுத்தி மேற்படி கிராமத்திலுள்ள பொதுமக்கள் மற்றும் பட்டியலின மக்களின் வழிபாட்டு உரிமையை மறுத்து கடந்த 5 வருடங்களாக பிரச்சனை செய்து வருகின்றனர். வாதி டிரஸ்ட்டுக்கு கோவிலை நிர்வாகம் செய்ய அரசோ, ஊர்பொதுமக்களோ எந்தவித உரிமையும் கொடுக்கவில்லை. வாதி தனிப்பட்ட டிரஸ்ட் என்பதால் அவர்கள் டிரஸ்ட் சம்பந்தமான வழிபாட்டு தலங்கள் சம்பந்தமாக மட்டுமே நடவடிக்கை எடுக்க இயலும். வாதி ஊர் பொதுக் கோவிலை ஆக்கிரமித்து உரிமை கொண்டாடவோ வழிபாட்டு உரிமையோ தடுக்கவோ எந்த அதிகாரமும் கிடையாது. மேற்படி தோட்டிலோவன்பட்டி கிராம சர்வே எண்.69 நீர்நிலை புறம்பபோக்கு என்பதால் மேற்படி சொத்து அரசுக்கு பாத்தியப்பட்டு அரசு பராமரிப்பில் இருந்து வருகிறது. அரசு அதிகாரிகளான 10 முதல் 13 உத்தேச பிரதிவாதிகள் கட்டுப்பாட்டிலும், பராமரிப்பிலும் இருந்து வருவதால் தபசில் சொத்து சம்பந்தமாக தாவா வழக்கை தீர்மானிக்க அவர்கள் அவசிய கட்சிக்காரர்கள் ஆவார்கள். எனவே மேற்படியார்களை தாவா வழக்கில் கட்சிக்காரர்களாக சேர்த்து வழக்கை மேல் நடத்த உத்தரவிட வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் உள்ளது. எனவே வழக்கு தாக்கல்.

6.**2.** எதிர்மனுதாரர் தன்னுடைய ஆட்சேபணையில், மனுதாரர்களுக்கு தாவா மனுவை தாக்கல் செய்ய எவ்வித உரிமையும் முகாந்திரமும் கிடையாது என்றும், பிரிவு 80(2) உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் அறிவிப்பு வழங்கப்படவில்லை என்றும், தாவா வழக்கினை காலதாமதப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்திலும் தாக்கல் செய்துள்ள மனுவை தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்பட்டுள்ளது.

6.**3.** இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. குறியீடு செய்யப்பட்ட ஆவணங்கள்

பரிசீலனை செய்யப்பட்டது. இம்மனுவில் சர்வே எண்.69 பரப்பு 0.50.40.5 என்ற சொத்தானது நீர்நிலையில் அமைந்துள்ள அரசு புறம்போக்கு நிலமாகும் என்று சொல்லப்பட்டுள்ளது. இவ்வழக்கில் கோரப்பட்டுள்ள நிவாரணமானது விளம்புகை பரிகாரம் ஆகும். இத்தகைய நிலையில், தபசில் சொத்தானது அரசு புறம்போக்கு நிலத்தில் உள்ளது என்பதை குறித்து ஆராய்வதற்கு மனுவில் சொல்லப்பட்ட உத்தேச பிரதிவாதிகளை சேர்க்க வேண்டியது அவசியமான ஒன்றாகும். மேலும் இம்மனுவில் எதிர்மனுதாரர்கள் பிரிவு 80 உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் அறிவிப்பு வழங்கவில்லை என்று வாதிட்டனர். அத்தகைய வாதம் இந்த இடைக்கால மனுவை தீர்மானிப்பதற்காக பரிசீலிக்க வேண்டியதில்லை.

6.4. ஏனென்றால் அத்தகைய அறிவிப்பானது வழக்கு தொடங்குவதற்கு முன்பாக வழங்கப்பட வேண்டிய அறிவிப்பு ஆகும். இடைக்கால மனு குறித்து தீர்மானிப்பதற்கு கட்டாயமாக பயன்படுத்த வேண்டியது அல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் இவ்வழக்கில் இணைக்கப்பட வேண்டிய அரசு அதிகாரிகளின் சார்பாக அரசு வழக்கறிஞர் தோன்றியுள்ளதும், எதிருரை இல்லை என்று குறிப்பு எழுதியுள்ளதும் பதிவுகள் மூலம் வெளிப்படுகிறது. மேலும் இம்மனு 6 மாதங்களாக நிலுவையில் இருந்து வருகிறது. இதன்மூலம் அரசு தரப்பிற்கு தேவையான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்பது வெளிப்படையாகிறது. எனவே பிரிவு 80(2) உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் வழங்கும் அறிவிப்பானது இம்மனுவை தீர்ப்பதில் பொருத்தமானதாக இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேற்கண்ட காரணத்தினால் இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இறுதியாக, இந்த மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 09ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மனுதாரர்கள்/வாதிகள்  தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை
எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
சாத்தூர்.
இ.ம.எண்.02/2025
உள்
அ.வ.எண்.49/2025
**உத்தரவு**
நாள்– 09.03.2026.